அக்கறையோடு தீர்ப்பு நகல் வந்தவுடனேயே சட்ட நிபுணர்களோடு கலந்தாலோசித்து, உயர் நீதிமன்றத்தின் Bench–ல் மேல்முறையீடு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(உ) நீலகிரி மாவட்டம், கூடலூர், பந்தலூர் வட்டங்கள், மின் இணைப்பு வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி, சபையை நடத்தவிடாமல் என்னை இப்படி தொல்லை செய்கிறீர்களே! என்ன விஷயம், சொல்லுங்கள்.*

திரு. மு. திராவிடமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம், கூடலூர், பந்தலூர் வட்டங்களில் கிட்டத்தட்ட 50, 60 ஆண்டுகளாக வீடுகள் கட்டி குடியிருப்பவர்கள் 10 ஆயிரம் பேர் மின் இணைப்பு கேட்டு காத்திருக்கிறார்கள். அங்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலிருந்தபொழுது* indemnity bond*–ம், வீட்டு வரி கட்டிய ரசீதும் இருந்தால் அவர்களுக்கு மின் இணைப்பு வழங்கலாம் என்று சொன்னார்கள். தற்போது அது நிறுத்தப்பட்டிருக்கிறது. அது மலைப் பகுதி. அந்த மலைப் பகுதிக்கு சிறப்பு. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறீர்கள், உட்காருங்கள். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூடலூரிலே மின்னிணைப்பு கேட்கின்ற பகுதி, ஜென்ம பகுதியாக இருக்கின்ற காரணத்தால், உச்ச நீதிமன்றம் ஒரு குழுவை அமைத்திருக்கின்றது. அங்கே இருப்பவர்களுக்கு எந்தவிதமான வளர்ச்சித் திட்டங்களை செய்து தர வேண்டுமென்றாலும், மின்சார இணைப்பு கொடுக்க வேண்டுமென்று சொன்னாலும், பல சான்றிதழ்களை வாங்க வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். அதிலே முதலாவதாக நிலவுடைமைச் சான்று வாங்க வேண்டும், பஞ்சாயத்து அலுவலகத்திலிருந்து தடையில்லாச் சான்று வாங்க வேண்டும், பஞ்சாயத்து அலுவலகத்திலிருந்து முழுமையான சான்றிதழ்*

2017 ஜூலை 14] **[திரு. பி. தங்கமணி]**

ஒன்று வாங்க வேண்டும், அதைப்போல வரைபடம் வாங்க வேண்டும், நடப்பாண்டு வீட்டு வரி ரசீது வாங்க வேண்டும், ஜென்ம நிலம் பிரிவு–17 எனில், நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்து தடையில்லாச் சான்று வாங்க வேண்டும். வனத் துறையிலிருந்து தடையில்லாச் சான்று வாங்க வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் ஆணையிட்டிருக்கின்றது. ஆனால், உச்ச நீதிமன்றம் ஒரு குழுவை அமைத்திருக்கின்றது. அந்தக் குழு ஆய்வு செய்த பின் தடையில்லாச் சான்றுகள் அனைத்தையும் வாங்கிக் கொடுத்தார்கள் என்றால் மின்சாரத்தைக் கொடுப்பதற்குத் தயாராகத்தான் இருக்கின்றோம். ஆனால், உச்ச நீதிமன்றத்தின் தடையாணை இருக்கின்ற காரணத்தால்தான் இந்தப் பிரச்சினை இருக்கின்றது. ஆகவே, இந்த தடையில்லாச் சான்றுகளையெல்லாம் வாங்கிக் கொடுப்பார்களேயானால், மின்சார வாரியம்மூலம் உடனடியாக அந்தந்தப் பகுதிகளுக்கு மின் இணைப்பு கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். 3,161 வீடுகளுக்கு மின் இணைப்பு இல்லாமல் இருக்கிறது. அது ஜென்ம நிலமாக இருப்பதுதான் இதற்குக் காரணம். அங்கு, வனத் துறைக்கும், வருவாய்த் துறைக்கும் இடையே சில பிரச்சினைகள் இருக்கின்றன. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியோடு நான் வருவாய்த் துறை அமைச்சராக இருந்தபோது, கிட்டத்தட்ட 11,000 ஏக்கர் நிலத்தை வனத் துறைக்கு நாங்கள் ஒப்படைத்திருக்கின்றோம். இருந்தாலும்கூட, அந்த இடத்திற்கான N.O.C. கிடைக்காத காரணத்தினால், அந்தப் பகுதியில் இருக்கும் வீடுகளுக்கு மின் இணைப்பு கொடுக்க முடியவில்லை. மேலும், அந்தப் பகுதியில் தார்ச் சாலையோ, இதர வசதிகளோ செய்து கொடுக்க முடியாமல் இருக்கிறது. ஆகவே, இவற்றையெல்லாம் அந்தக் குழுவின்மூலம் ஆய்வு செய்து, அனைத்து தடையில்லாச் சான்றுகளையும் பெற்றுக் கொடுப்பார்கள் என்று சொன்னால், மின்சார வாரியம் அவர்களுக்கு மின் இணைப்பு கொடுக்கத் தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சிறப்புக் கவன ஈர்ப்பு. ஜவுளித் துறை, (குறுக்கீடு) உட்காருங்கள். சரக்கு மற்றும் சேவை வரி விதிக்கப்பட்டது. . . (குறுக்கீடு) மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*